**வரையறுத்த மஹவெலி கால்நடை மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனி – 2017**

---

வரையறுத்த மஹவெலி கால்நடை மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கருதும் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் மத்தியதர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கம்பனியின் அமைப்பு புறவிதியின் பிரகாரம் அனுமதித்த மூலதனம் ரூபா 10 ஆன 5,000,000 பங்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் தொடக்க பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தும் ஏனைய பங்குகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட மூன்று பங்குகளும் மற்றுமொரு தனியார் கம்பனியின் மூன்று பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மஹாவெலி அதிகாரசபையின் உரிமையாண்மைக்காக கம்பனியின் எதுவித பங்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை மஹாவலி அதிகார சபையின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இக்கம்பனி அதிகார சபையின் பூரண உரிமையுடனான ஒரு துணைக் கம்பனியாகக் காட்டப்பட்டிருந்ததுடன் அக்கம்பனியில் ரூபா 418,871,277 தொகையான முதலீடு காட்டப்பட்டிருந்த போதிலும் முதலீட்டிற்கு எதுவித பிரதிபலனும் இலங்கை மஹாவெலி அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) சிறிய மற்றும் மத்திய அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான விளைதிறன் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 7,313,171 புத்தகப் பெறுமதியான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க ஏற்பட்டுள்ள மதிப்பீட்டுத் தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 28 ஆவது அத்தியாயத்தின் 28.18 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதியத்திற்கு ஒதுக்கீடு செய்யும் போது எதிர்வு கூறப்பட்ட அலகு செலவு முறைமை அல்லது அதற்கு சமமான ஏனைய முறைமை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் ஊழியர்கள் கடைசியாகப் பெற்றுக்கொண்ட சம்பளத்தையும் சேவைக்காலத்தையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டிற்கும் கணக்காய்வில் கணிப்பீடு செய்யப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைக்கான ஒதுக்கீடு ரூபா 1,216,096 ஆல் குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) கணக்கீட்டுக்குக் கொள்கைகளின் பிரகாரம் கிராந்துரு கோட்டே விவசாயப் பண்ணை கட்டிடங்களின் விளைதரும் ஆயுட் காலம் 20 ஆண்டுகளாக இருந்த போதிலும் 02 கட்டிடங்களின் விளைதரும் ஆயுட்காலம் 40 ஆண்டுகளாகவும் 05 கட்டிடங்களின் விளைதரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகவும் கருதி பெறுமானத் தேய்வு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது பெறுமானத் தேய்வின் அளவு ரூபா 187,859 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ஆண்டிற்கான இருப்புக் குறைவு ரூபா 941,552 மற்றும் மீதிகளின் குறைவு ரூபா 17,730,475 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் அச் செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இனங்காணப்படாத பண்ணைகளுக்கிடையிலான கடன்பட்டோர் மீதிகளின் ரூபா 14,117,550 பெறுமதி தொங்கல் கணக்கில் உள்ளடக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஏ) நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் காசு மற்றும் காசுக்குச் சமனான வைகளின் பெறுமதி ரூபா 581,165 மறைப் பெறுமதியாக இருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 313,324 நேர்ப் பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் ஆதனம், பொறி, உபகரணங்களின் கிரயமும் செலுத்த வேண்டிய பெறுமதி சேர்வரிப் பெறுமதியும் முறையே ரூபா 102,562,998 மற்றும் ரூபா 2,991,095 ஆக இருந்தும் பேரேட்டுக் கணக்கு மற்றும் துணைப் பேரேட்டின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 102,473,179 மற்றும் ரூபா 2,499,005 ஆக இருந்ததனால் ரூபா 89,819 மற்றும் ரூபா 492,090 விளக்கமளிக்காத வித்தியாசங்களாகும்.

(ஒ) பின்வரும் விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| **பொது ஒதுக்கம்** | **ரூபா** | |
| மஹவெலி பொருளாதார முகவராண்மை | 403,962,731 | பெறுமதியை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள். |
| கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2,900,000 | |
| ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியம் | 3,583,706 | மூலதன மானியமாக கணக்கு வைப்பதற்குரிய ஆவணங்கள் |
| வெளிநாட்டு உதவி | 5,729,782 | |
| செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி | 285,185 | I உறுதிப்படுத்தல்<br>II வரிச் சான்றிதழ் பத்திரம் |
| மஹவெலி கால்நடை கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டியவை | 1,030,137 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை. | 165,600 | |

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்.

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்த்து மஹாவெலி கால்நடை மற்றும் விவசாய தொழில்முயற்சி (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலையும் காசுப்பாய்ச்சலையும் நிதிக்கூற்றுக்களானவை சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்கள் காட்டப்படுகின்றது.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் போதியளவில் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும்,

எனது பரிசோதனையிலிருந்து தென்படுத்துவதற்கு ஏற்ப கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்,

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட நீராவிய விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான ரூபா 5,820,430 தொகையான கால்நடை இருப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ 03/2015 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை.

| | | |
|---|---|---|
| (i) | 2.2 ஆம் பந்தி | கம்பனிகளை வகைப்படுத்தலில் உப தொகுதி ‘‘எப்’’ இன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகளில் மாதாந்த படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம், வரிசை அமைச்சு செயலாளரின் சிபார்சுடன் நிதி அமைச்சின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் வரிசை அமைச்சு செயலாளரின் சிபார்சும் நிதி அமைச்சரின் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு ஒரு பணிப்பாளருக்கு ரூபா 60,000 மாதாந்த படி செலுத்தப்பட்டது. |
| (ii) | 2.10 ஆம் பந்தி | ஒரு பணிப்பாளருக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த படி மற்றும் நிறைவேற்றுனர் அல்லாத ஒரு பணிப்பாளருக்குச் செலுத்தப்படுகின்ற கூட்டங்களில் பங்குபற்றுகின்ற படிகளிலிருந்து நிறுத்தி வைத்தல் வரிப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் ஒரு பணிப்பாளருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 60,000 மற்றும் நிறைவேற்றுனர் அல்லாத 03 பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 80,000 கூட்டங்களில் பங்குபற்றும் படிகளிலிருந்து ரூபா 14,000 வரிப் பணம் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை — உரிய செயற்பாடு முடிவடைந்தும் உடனடியாக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் தற்காலிக வவுச்சர்கள் மூலம் 18 மாதங்களுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 43,936 முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 4,421,557 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,025739 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 395,818 தொகையான வீழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிருவாகச் செலவுகள் ரூபா 871,770 ஆல் குறைவடைந்திருந்தும் பிரதான நடவடிக்கைகளிலிருந்து உழைத்த இலாபம் ரூபா 1,255,075 ஆல் குறைவடைதல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் அமைப்பு புறவிதியில் 12 அடிப்படைக் குறிக்கோள்கள் காட்டப்பட்டிருந்தும் கம்பனியின் பண்ணைகளில் பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மொத்தமாகவும் சில்லறையாகவும் கோழிகளை வளர்த்தல், விவசாயிகளுக்கு கோழிகளை வளர்ப்பதற்காக தேவையான உணவுகளை உற்பத்தி செய்தல், பசுக்கள், பன்றிகள், கோழிகள் முதலிய உயிரினங்களை வளர்த்தல், விற்பனை செய்தல், மேம்படுத்துதல், செயன்முறைப்படுத்துதல், ஏற்றுமதி செய்தல் மற்றும் பழவகைகள், தானிய வகைகள் சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் எருமை, பசு, கோழி, பன்றி மற்றும் ஆடுகள் வளர்ப்பது சிறி அளவில் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் கால்நடைப் பிரிவின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் கீழ் இலக்கிடப்பட்ட உற்பத்திகளை உள்ளபடியான உற்பத்திகளுடன் ஒப்பீடு செய்த போது புரைலர் கோழி இறைச்சி உற்பத்தி 45 சதவீதமும் பன்றி இறைச்சி உற்பத்தி 4 சதவீதமும் ஆடுகளை வளர்த்தல் 28 சதவீதமும், எருமைகளை வளர்த்தல் 38 சதவீதமும் ஆக குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தன.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் சொத்துக்களை மெய்மையாய்வு செய்த போது விற்றுத் தீர்ப்பதற்கு சிபார்ச செய்யப்பட்ட ரூபா 859,256 பெறுமதியான உடைந்த பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் விற்றுத் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியால் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மஹாவெலி அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 3,162,812 தொகையான 04 வாகனங்கள் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் அவ் வாகனங்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மஹாவெலி அதிகார சபைக்குச் சொந்தமான தெமடகொட பிரதேசத்தில் அமைந்துள்ள காணி கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 14,929,159 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அக்காணியை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொண்ட சம்பள திருத்தங்களின் பிரகாரம் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 8,070,961 நிலுவைச் சம்பளம் மற்றும் அது தொடர்பான ரூபா 1,817,553 ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அவை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 655,202 தொகையான பால் சார்ந்த உற்பத்திப் பொருட்களின் பௌதீக இருப்புக்களின் உள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு இருப்பு மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) கம்பனியின் பாலை எடுத்துச் செல்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட தனி நபர்களினால் ரூபா 10,000 முற்பணம் கம்பனியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 03 நபர்கள் உரிய வைப்புக்களைச் செய்திருக்கவில்லை.

(ஊ) கிராந்துரு கோட்டே பண்ணையில் அமைந்துள்ள பால் செயன்முறைப்படுத்தல் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் மூலம் பால் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. தொழிற்சாலை கட்டிடங்கள் பழைமையடைந்ததன் காரணமாக வளவின் நிலத்தில் டயில்கள் ஒடைந்து காணப்பட்டமை, கூரைகள் பழுதடைந்திருந்தமை, மழைநீர் தொழிற்சாலைக்குள் வருதல், வடிகால் முறைமைகள் பழுதடைந்திருந்தமை, உள்ளக சுத்திகரிப்பு முறைமை பலவீனமான நிலையில் காணப்படுதல், முதலிய விடயங்களின் காரணமாக சுகாதார சிக்கல்கள் உருவாகியிருந்தது. இவ்வாறான பலவீனமான சூழ்நிலையின் அடிப்படையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக எதிர்காலத்தில் சட்டச் சிக்கல்கள் உருவாகலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்ட மற்றும் தொழில் தருனரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட முறையே ரூபா 8,713,984 மற்றும் ரூபா 627,785 செலுத்த வேண்டி பங்களிப்பு பணம் செலுத்தப்படாதிருந்தன் காரணமாக எதிர்காலத்தில் கம்பனிக்கு மிகைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த 05 கட்டிடங்களுக்குரிய ரூபா 21,359,381 பெறுமதியான சொத்துக்கள் கம்பனியால் எழுத்து மூல அங்கீகாரமின்றி முறையற்ற வகையில் மஹாவெலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 45 நாட்கள் பூர்த்தியான கம்பனியின் புரய்லர் வகையான கோழிக் குஞ்சுகளை இறைச்சிக்காக விற்பனை செய்தல் கம்பனியின் கொள்கையாக உள்ளதுடன் பண்ணையிலிருந்த குளிர்காப்பு இயந்திரம் செயற்படாததன் காரணமாக 45 நாட்களுக்கு மேற்பட்ட காலம் புரய்லர் கோழிகள் விற்கப்படாது வைத்திருக்க வேண்டி ஏற்பட்டதன் காரணமாக அக் கோழிக் குஞ்சுகளுக்கு உணவுகளை வழங்குவதற்காக மாத்திரம் ரூபா 2,687,262 மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கம்பனிக்குச் சொந்தமான கிராந்துருகோட்டே பண்ணைய மிருக வளர்ப்பு பயிற்சி நிலையமாக மாற்றும் குறிக்கோளுடன் மஹாவெலி அதிகார சபையின் ''சீ'' வலயத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 12,501,900 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பசுக்கொட்டில், ஆட்டுக் கொட்டில்களை உள்ளடக்கிய நிர்மாணங்களும் பொருட்களும் ரூபா 8,967,600 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி இக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஏனைய தரப்பினர்களால் அவர்களின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்ட இந்நிர்மாணங்கள் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் இந் நிர்மாணங்களைப் பயன்படுத்தவதற்கு உறுதியான திட்டம் அல்லது நடைமுறை கம்பனியிடம் இல்லாததால் ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து அச் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

### 4.5 ஆளணி நிருவாகம்

2010 ஒக்தோபர் மாதத்திலிருந்து வரிசை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள கம்பனிக்குச் சொந்தமான நீராவிய பண்ணைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த 06 உழியர்களின் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புப் பணம் அமைச்சினாலும் 2016 மார்ச் மாதத்திலிருந்து மஹாவெலி அதிகார சபையினாலும் செலுத்தப்பட்டு வந்தன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் பாதீடு செய்யப்பட்ட தரவுகளுக்கும் உள்ளபடியான தரவுகளுக்குமிடையே 22 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சுடைய முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்கி இருக்காமை. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகாலமாக தீர்த்து வைக்காது காணப்பட்ட மீதியைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சிகள் எடுக்காமை. |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | கம்பனியின் மனித வளங்களை வெளித்தரப்பினர்களுக்கு வழங்குவதனை முறையாக முகாமைத்துவம் செய்யாமை. |
| (ஈ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | அமைப்பு புறவிதியில் குறிப்பிடப்பட்ட சில குறிக்கோள்களை |

| | | |
|---|---|---|
| | | அமுல்ப்படுதுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | சொத்துக்கள் நிருவாகம் | பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்படுதல் மற்றும் ஏனைய தரப்பினர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |